<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>
<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>

**MCOP.No:159/2024** நாள் 02.03.2026

ம.சா.1, திரு. இருளப்பன்

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்து சமயத்தில் என் மகன் 12ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார். அவர் வத்திராயிருப்பில் உள்ள ஹிந்து மேல்நிலைப்பள்ளியில் படித்து வந்தார். என் மகன் விபத்து சமயத்தில் 12ம் வகுப்பை படித்து வந்தார் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அந்த பஸ்ஸானது வத்திராயிருப்பில் இருந்து புதுப்பட்டிக்கு வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். வத்திராயிருப்பு – புதுப்பட்டி சாலையில் ஒரே நேரத்தில் ஒரு பேருந்து தான் செல்லமுடியும் என்றால் சரிதான். அந்த பேருந்தில் அளவுக்கு அதிகமான கூட்டம் இருந்தது என்றால் ஆமாம். அந்த மினிபஸ்ஸீக்கு உரிய பாலிசி விதிகளின் படி 27 பயணிகள் தான் பயணம் செய்ய முடியும் என்றும் ஆனால் அந்த பேருந்தில் 34 பயணிகள் பயணம் செய்துள்ளார்கள் என்றால் அது சரிதான். அந்த மினிபேருந்தானது பாலிசி விதிமுறைகளை மீறி அதிக பயணிகளை ஏற்றி சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. பாலிசி விதிமுறைகளை மீறி அதிக பயணிகளை ஏற்றி சென்று விபத்தை ஏற்படுத்தியதால் எங்களுக்கு 1ம் எதிர்மனுதாரர் தான் விபத்து இழப்பீடு தொகையை செலுத்த வேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல. மேற்படி மினிபேருந்தின் ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை கவனக்குறைாவக ஓட்டி சென்றதால் தான் அந்த மினிபேருந்து கவிழ்ந்தது என்றால் அது சரிதான். விபத்து சமயத்தில் என் மகன் எந்தவித வருமானம் இல்லாமல் படித்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். நாங்கள் இந்த இழப்பீடு மனுவில் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள தொகைகள் அதிகமானது என்று சொன்னால் அது சரியல்ல. இந்த வாகன விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு விபத்து இழப்பீடு தொகை செலுத்தவேண்டியதில்லை என்று சொன்னால் அது சரியல்ல.1ம் எதிர்மனுதாரர் பாலிசி

விதிமுறைகளை மீறியுள்ளதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989
on the 02ndday of March 2026

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.